செய்தி வெளியீடு எண். 69 நாள்: 31.01.2018

**அம்மா இரு சக்கர வாகனம் வாங்க விண்ணப்பங்கள் 05.02.2018 அன்று வரை வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்தில் பணிபுரியும் மற்றும் சுய தொழில் செய்யும் மகளிருக்கு அரசு வழங்கும் அம்மா இரு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் 22.01.2018 முதல் அந்தந்த வட்டாரம், நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலகங்களில் வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க கடைசி நாள் 05.02.2018 மாலை 5.00 மணி ஆகும்.

எனவே, வயது வரம்பு 18 – 40, ஆண்டு வருமானம் (தனி நபர்) ரூ. 2.50 இலட்சம், கல்வித் தகுதி குறைந்தது 8-ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி, ஓட்டுநர் உரிமம் நிரந்தரம் / தற்காலிக ஓட்டுநர் உரிமம் (Driving License / LLR) ஆகிய தகுதியுள்ள மகளிர்கள் அந்தந்த வட்டாரம், நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலகங்களிலிருந்து விண்ணப்பங்கள் பெற்று 05.02.2018 மாலை 5.00 மணிக்குள் உரிய அலுவலகத்தில் விண்ணப்பித்து இந்த அரிய வாய்ப்பினை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**